Y.M.C.A

# யாழ் பொலிஸ் உத்தியோகத்தர்களை வவுனியா வருமாறு அரசு திடீர் அழைப்பு

யாழ் மாவட்டத்தில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர்களையும், பொலிஸ் அலுவலகங்களில் கடமையாற்றும் பல்வேறு தரத்தைச்சேர்ந்த ஊழியர்களையும் வவுனியாவுக்கு வருமாறு உயர் மட்டத்தில் இருந்து பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதம் முதல் இவர்கள் தமது கடமைகள் எதனையும்செய்யாதுஇருக்கிறார்கள் என்பதால், இவர்களின் கடந்த ஐந்து மாதங்களுக்குரிய சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதற்கான காரணம் காட்டி வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. வவுனியா சென்றால் அங்கேயே கடமையாற்றவேண்டி ஏற்படும் என்றும் அதனால் வேறு பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி வரும் என்றும் இவ்வுத்தியோகத்தர்கள்செய்வதறியாது திண்டாடுகின்றனர். ஒருவேளை இவ்வழைப்பு தென் பகுதிக்கான இடமாற்றத்துக்கு ஒரு முன்னோடி முயற்சியாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது (47)

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 272 திங்கள் 12-11-1990 (ஐப்பசி 26) ந. ஆகிர் 23

யாழ்ப்பாணம் வந்து கொழும்பு திரும்பிய

# தனியார்துறைத்தமிழ்ஊழியர் பதவியிலிருந்து இடைநிறுத்தம்

## நாலாவது மாடியிலும் விசாரணை

**யாழ்ப்பாணம் வந்து கொழும்பு திரும்பிச்சென்றுள்ள தனியார் ஸ்தாபனங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் பணிபுரியும் தமிழர்களில் பலர் அவர்களது பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.**

கடந்த ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பித்தபோது சொந்த இடங்களுக்கு வந்து உடன் திரும்ப முடியாது, தாமதமாகிக் கடமைக்குச் சென்றவர்களுக்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவர்களுக்குத் திகதிகள் குறிக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்றுவருவதோடு சிலர் இரகசிய பொலிஸாரிடமும் ஒப்படைக்கப் படுகிறார்களாம்.

இரகசியப் பொலிஸாரினால் 4 ஆம் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு தீவிரவாதம் தொடர்பாக கேள்விகள் தொடுக்கப்படுகின்றனவாம்.

இவற்றையடுத்து பல தமிழ் ஊழியர்கள் கடமைக்குச் செல்லாமல் ராஜினாமாக் கடிதங்களைச் 'சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (66)

## உரிய முறையில் நிரப்பாததால் விண்ணப்பங்கள் திரும்பின

யாழ் செயலகத்தைச் சேர்ந்த பல உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அண்மைக்கால நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டமைக்கான நஷ்ட ஈடு கோரும் விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்திசெய்யாமையினால் அவை கொழும்பிலிருந்து திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதே காரணங்களால் மேலும் பல விண்ணப்பங்கள் உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்க முடியாமல் செயலகத்தில் தேங்கிக் கிடப்பதாக யாழ் பதில் அரச அதிபர் திரு. கே. சண்முகநாதன் தெரிவித்தார். (66)

## குரும்பசிட்டியில் படையினரின் முன்னேற்ற முயற்சி முறியடிப்பு

நேற்று முன்தினம் இரவு 7 30 மணியளவில் குரும்பசிட்டிப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர், குப்பிளான் கடற்கரைப் பிள்ளையார் கோயில் பகுதியை நோக்கி முன்னேற முயன்றனர்.

விடுதலைப்புலிகள் இதனையடுத்து கடும் தாக்குதலை மேற்கொண்டனர். தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத இராணுவத்தினர் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினர். சேத விபரங்கள் பற்றித் தெரியவில்லை. (48)

## ஜனதாதள(எஸ்) செயலாளராக சௌத்தாலா

பிரதமர் சந்திரசேகரின் ஜனதாதள(எஸ்) கட்சியின் பொதுச் செயலாளராக தேவிலாலின் புதல்வரான ஓம் பிரகாஷ் சௌத்தாலா நியமிக்கப்பட்டுள்ளார். ஓம் பிரகாஷ் சௌத்தாலா வி. பி. சிங்கின் ஆட்சியில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மிதிவெடியில் சிக்கி சிப்பாய்கள் காலிழப்பு

மன்னார் நகர் இலங்கை வங்கிக் கட்டிடத்தில் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். இம்முகாமிற்கு அருகே ஏற்கனவே விடுதலைப்புலிகள் வைத்திருந்த மிதிவெடி வெடித்ததில் 3 சிப்பாய்கள் காலிழந்தனர்.

## காரைநகர் பாடசாலைகளில் 95 வீதமான மாணவர் வரவு

இந்த வாரம் காரைநகர் பிரதேச பாடசாலைகளில் மாணவர்கள் வரவு 95 சத வீதமும் ஆசிரியர்கள் வரவு 99 சதவீதமுமாக இருந்தன.

காரைநகர் ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலைக்கு 99 வீதமான மாணவர்களும் யாழ்ற்றன் கல்லூரியில் 90 வீத மாணவர்களும் ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்திற்கு 80 வீத மாணவர்களும், மெய்கண்டான் பாட

—04 ஆம் பக்கம் பார்க்க

சரவணபவன் மரணவிசாரணையில் சாட்சி

## "4-ம் மாடியிலிருந்து பாயும்போது அவரைப் பிடிக்க முயன்றேன்"

திரு. சரவணபவன் நாலாம் மாடியில் இருந்து பாய்ந்த போது நான் அவரைப் பிடிக்க முயன்றேன். எனினும் அவரது சாரமே எனது கையில் அகப்பட்டது. அவர் கீழே வீழ்ந்து விட்டார்.

இவ்வாறு கடந்த 6-ம்திகதி கொழும்பில் நான்காம் மாடியில் இரகசியப்பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்ட சரவணபவனின் மரணம் குறித்து கோட்டை நீதிமன்றத்தில் நடந்த மரண விசாரணையின்போது சாட்சி

—04 ஆம் பக்கம் பார்க்க

## வைத்தியசாலை ஊழியர்கள் கடமைக்கு சமுகம் தரவும்

யாழ் போதனா வைத்தியசாலையில் கடமை புரியும் சகல ஊழியர்களையும் தவறாது கடமைக்குச் சமுகமளிக்கும்படி வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

கடமைக்குச் சமுகம்தரத் தவறுவோர் மீது அரச ஊழியர்களின் கோட்பாட்டின்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

இன்று திங்கள் முதல் காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரையும் பிற்பகல் 1 மணி

—04 ஆம் பக்கம் பார்க்க

## குண்டூசி மூலம் பாவித்த பற்றறிகள் விற்பனை

பிளாஸ்ரிக் உறையினால் இரு முனைகளும் காவலிடப்பட்ட இந்திய பற்றறிகள் குண்டூசி மூலம் பாவித்த பின்னர் வியாபாரிகள் விற்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் இவ்வாறு விற்கப்பட்ட பற்றறிகளை வீடுகளுக்குக் கொண்டு சென்று பாவித்தபோது அவை செயலிழந்து இருக்கக் காணப்பட்டன. இதனால் பொதுமக்கள் அவதானமாக இவற்றை வாங்குமாறு தெரிவிக்கப்படுகிறது. (39)

மாகாண அத்தியட்சகர் சேதுகாவலர் உயர்மட்டப்பேச்சு

## கொழும்பில் தேங்கியுள்ள வடபகுதி தபால்கள் முத்திரைகள் அடுத்து வரும் கப்பல்களில் வரும்

வடபகுதி தபால் அலுவலகங்களுக்கு விரைவில் போதியளவு முத்திரைகள், வான் கடிதங்கள் என்பன கொழும்பிலிருந்து கப்பல்கள் மூலம் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

வடபகுதி தபால் சேவைகளை சீராக நடாத்துவது குறித்து மாகாண தபால் அத்தியட்சகர் திரு. எஸ். எம். சேதுகாவலர் கொழும்பில் தபால் மா அதிபர் கூட்டுப்படைத் தலைமையலுவலகம் என்பவற்றுடன் பேச்சு நடாத்தியதையடுத்து இவை அனுப்பிவைக்கப்படவுள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதல் வடபகுதிக்கு அனுப்பப்படாது கொழும்பில் தேங்கியுள்ள வெளிநாட்டுத் தபால்கள் வெளிநாட்டுத் தபாற்பொதிகள், பதிவு செய்யப்பட்ட கடிதங்கள் என்பனவும் அடுத்து வரும் கப்பலில் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

வடபகுதி தபாற் பகுதி ஊழியர்களின் சம்பளத்தைப் பணமாக வழங்கவும் தபால்

—04 ஆம் பக்கம் பார்க்க

கூட்டுறவாளர் ஆதரவு

மாவீரர் நிகழ்ச்சி நிரல்

— விபரம் 2-ம் பக்கம் —

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

# பாடசாலைகள் பாதுகாப்புப் பற்றி செஞ்சிலுவை சங்கத்தை சந்திக்கும்

தமிழ்ப்பகுதிப் பாடசாலைகள், ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை கல்வி அமைச்சுக்கும், அரசுக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாகத் தெரிவிப்பதற்காக இலங்கை தமிழராசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் சர்வதேசச் செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளார்.

பாடசாலைகள் மீது விமானத்தாக்குதல் நடத்தாது பார்த்துக் கொள்வது இப்பேச்சுவார்த்தையின் முக்கிய அம்சமாக விருக்கும்.

கடந்த ஐந்து மாதகாலமாகக் கப்பலில் வந்த பணத்தில் ஆசிரியர்களுக்கு எவ்வித தொகையும் வழங்கப்படாததனால் காசோலையை மட்டும் வைத்துக்கஷ்டமுறும் ஆசிரியர்களுக்கு மாதாந்த சம்பளம் வழங்க 35 மில்லியன் ரூபா காசாக கப்பல் மூலமாவது அனுப்பவேண்டுமெனவும் இப்பேச்சுவார்த்தையில் வலியுறுத்தப்படவுள்ளது.

இதேவேளை பாதுகாப்பு வலயமான யாழ் ஆஸ்பத்திரிச் சூழல் பகுதியில்கடந்தவெள்ளி இடம்பெற்ற விமானத் தாக்குதல் சம்பவம் ஸ்ரீலங்கா அரசின் அரசியல் நாகரிக மற்றமூர்க்கந்தனமான செயல் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. (32)

## முல்லைத்தீவில் நிவாரண ஏற்பாடுகள் துரிதம்

முல்லைத்தீவில் இலவச நிவாரணங்கள் வழங்க சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்தோர், தொழில் வாய்ப்பிழந்தோர், 1500 ரூபாவுக்கு உட்பட்ட வருமானம் பெறுவோருக்கான இலவச உணவு அடுத்த வாரம்முதல் வழங்க முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளார்.

இந்நிவாரணத்தை வழங்க அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர்களும் துரிதமாகச் செயற்பட்டு வருகின்றனர். (38)

## மண்டைதீவுப் பகுதியில் மூளைக்காய்ச்சல் அபாயம்

மண்டைதீவுப்பகுதியில் மூளைக்காய்ச்சல்நோய் தீவிரமாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மூளைக்காய்ச்சல்நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளி ஆபத்தான நிலையில் மானிப்பாய் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். பலர் இந்த நோய்க்கு இலக்காகியுள்ளனர் என்று சுகாதாரப்பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அல்லைப்பிட்டிப்பகுதியிலும் இந்நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

மூளைக் காய்ச்சல் நோயை ஏற்படுத்தும் நுளம்புகளை அழிக்கும் நடவடிக்கையில் மலேரியாத் தடை இயக்கத்தினர் தற்போது ஈடுபட்டுள்ளனர். அண்மையில் இங்கு நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் பின்பே இந்நோய் வேகமாகப் பரவி வருவது குறிப்பிடத்தக்கது. இதே வேளை அல்லைப்பிட்டிக்கு மலத்தியோன் மருந்து அடிக்கும் வேலை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (24)

## மண்வெட்டிகள் தருவிக்க நடவடிக்கை

யாழ் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்காக. ஆயிரம் மண்வெட்டிகள் அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன.

கொழும்பிலுள்ள யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் கமநலசேவைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார். (66)


### சிறு விளம்பரம்

**சேவை**

தரமான போட்டோ ஸ்ரற், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். ''ஸ்கைலைன்ஸ்'' 281B, மணிக்கூட்டுக் கோபுரவீதி, யாழ்ப்பாணம். ''Sky-lines' 281B, Clock Tower Road, Jaffna. (ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை). 11029

**தேவை**

27 வயதிற்குட்பட்ட, வெளிநாடு செல்லக்கூடிய பிராமணகுல மணமகள் தேவை. விபரங்கட்கு நேரில் தொடர்பு கொள்ளவும். திருமதி இராஜரத்தினஐயர், ''மங்களபதி'' பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி. 41/5, அரசவீதி, நல்லூர். 11053


## சார்க் மாநாடு; திகதி மாற்றம்

இம்மாதம் பத்தொன்பதாம் திகதி மாலைதீவுத் தலைநகர் மாலேயில் தொடங்குவதாக இருந்த தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்புச் சங்க (சார்க்) அமைப்பின் ஐந்தாவது உச்சிமாநாடு இரண்டு நாட்கள் கழித்துத் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரதத்தின் புதிய பிரதம மந்திரி திரு. சந்திரசேகர் இம்மாநாடில் பங்கேற்க வேண்டுமென்பதற்காக இம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

திரு. சந்திரசேகர் 20ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக நம்பிக்கை வாக்குக் கோர வேண்டியுள்ளது. அதனால் அவர் புதுடில்லியில் இருக்கவேண்டியுள்ளது.

## தமிழோசையில் 'பிக் மேலியன்'

பேரறிஞர் பெர்னாட்ஷாவின் 'பிக் மேலியன்' நாடகத்தின் தமிழ் வடிவம் டிசம்பர் முதலாம் திகதி சனிக்கிழமையிலிருந்து பி.பி.ஸி. தமிழோசையில் 13 வாரங்கள் தொடர்ந்து ஒலிபரப்பாகவுள்ளது.

இந்த நாடகத்தில் தமிழக திரைப்பட நடிகை ராதிகா கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.

தமிழோசை தயாரிப்பாளர். சங்கர்— சங்கரமூர்த்தி இந்தநாடகத்தை நெறிப்படுத்தியுள்ளார்.

## பிரேமதாஸவின் நம்பிக்கை

திரு. சந்திரசேகரின் ஆட்சிக்காலத்தில் ஸ்ரீலங்காவுக்கும் பாரதத்துக்கும் இடையிலான நடப்பு மேலும் வலுப்பெறும் என ஸ்ரீலங்கா ஜனாதிபதி திரு. ரணசிங்க பிரேமதாஸ அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச்செய்தியில் நம்பிக்கைதெரிவித்துள்ளார்

திரு. சந்திரசேகருக்குப் பல உலகத் தலைவர்கள் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர்.

## ஜம்பம் பலிக்குமா?

''திரு. சந்திரசேகர் தலைமையிலான பாரத அரசுடன் நல்லுறவை வளர்க்க ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்'' என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன கூறியுள்ளார்.

## யாழ் மாவட்ட உடற்கல்விக் கருத்தரங்கு

யாழ் கல்வித்திணைக்கள உடற்கல்விப் பிரிவினால் நடாத்தப்படும் குறுகியகால உடற்கல்விப் பாடத்திட்டக் கருத்தரங்கு நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மருதனாமடம் கோட்டம்- இராமநாதன் மகளிர்கல்லூரியில் 12-ம் திகதியும், பண்டத்தரிப்பு கோட்டம் - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் 13-ம் திகதியும், வடமராட்சி கோட்டம் - வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் 15-ம் திகதியும், சாவகச்சேரி கோட்டம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 16-ம் திகதியும், யாழ்ப்பாணம் கோட்டம்- யாழ் இந்துமகளிர் கல்லூரியில் 17-ம் திகதியும், வேலணை - கோட்டம் சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி ம. மகாவித்தியாலயத்தில் 18-ம் திகதியும் இக்கருத்தரங்கு நடைபெறும்.

ஆண்டு 6-11 வரை உடற்கல்வி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமக்கு வசதியான கோட்டத்தில் நடைபெறும் கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (74)

## சந்திரசேகர் அறிவிப்பு

'நாட்டில் நிலவும் பதற்றத்தை தணிப்பதும் மக்களுக்கு ஆறுதல் அளிப்பதும் தனது அரசின் தலையாய பணியாக இருக்கும்' என்று பாரதத்தின் புதிய பிரதம மந்திரி திரு. சந்திரசேகர் கூறியுள்ளார்.




## கூட்டுறவாளர் ஆதரவில் மாவீரர் சிறப்பு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், தீவுப்பகுதி, தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சி, வலி - கிழக்கு ஆகிய ஆறு கூட்டுறவுக் கோட்டங்களில் இம்மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் ஆறு நாட்களுக்கு மாவீரர் தினம் கூட்டுறவாளர்களினால் கொண்டாடப்படும்.

**1 ஆம் நாள் - யாழ்ப்பாணம்**

21 ஆம் திகதி காலை 10 மணிக்கு கூட்டுறவுக்கொடிகளை ஏந்திய மூவர் மரதன் ஓட்டமாக முன்செல்ல இவர்களைப் பின் தொர்டர்ந்து 9 பெண்களும் 15 ஆண்களும் சைக்கிளில் ஊர்வலமாக மானிப்பாய் பல நோ. கூ சங்க முன்றலில் இருந்து புறப்பட்டு தாவடிச்சந்தி ஊடாக கோண்டாவில் சந்தி, திருநெல்வேலிச் சந்தி, கல்வியங்காடு, அரியாலை, கச்சேரி ஊடாக கே. கே. எஸ் வீதி வழியாக கோட்ட நிகழ்ச்சிகள் இடம்பெறும் யாழ் மகளிர் கல்லூரியை வந்தடைவார்கள்.

**2 ஆம் நாள் - தீவுப்பகுதி**

இதே போன்ற அணியினர் ஊர்காவற்றுறை தெ. ப. பொ. கூட்டுறவுச்சங்கத்தின் தற்போதைய காரியாலய முன்றலில் ஆரம்பமாகி ஊர்காவற்றுறை பல நோ கூ. சங்க தலைமைக் காரியாலயம் ஊடாக வேலணைச்சந்தியை வந்தடைந்து புங்குடுதீவு வீதியால் புங்குடுதீவு ப. நோ. கூ. சங்க பிரதேசத்தை வீதி வலம் வந்து புங்குடுதீவு மகாவித்தியாலய முன்றலை சென்றடையும்.

**3 ஆம் நாள் - தென்மராட்சி**

கைதடியில் இருந்து ஆரம்பமாகும் மரதன் ஓட்டம் சாவகச்சேரி, கொடிகாமம், பளை சென்று திரும்பவும் அதே வழியாகச் சாவகச்சேரி இந்துக்கல்லூரி விழா மண்டபத்தை வந்தடையும்.

**4 ஆம் நாள் - வலிகாமம்**

காரைநகர் ப. நோ. கூ. சங்க முன்றலில் இருந்து ஆரம்பமாகி சித்தங்கேணி பண்டத்தரிப்பு அம்பனை மாசியப்பிட்டி மானிப்பாய் சங்கானை ஊடாக நிகழ்ச்சிநடைபெறும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை வந்தடையும்.

**5 ஆம் நாள் - வடமராட்சி**

வல்லிபுர ஆழ்வார் கோவிலில் இருந்து புறப்படும் ஊர்வலம் தும்பளை, பருத்தித்துறை, பொலிகண்டி ஊடாக வல்வெட்டித்துறையை அடைந்து அங்கிருந்து உடுப்பிட்டி, குஞ்சர் கடை, நெல்லியடி ஊடாக கோட்ட நிகழ்ச்சி இடம்பெறும் நெல்லியடி மத்தி மகளிர் கல்லூரி மண்டபத்தைச் சென்றடையும்.

**6 ஆம் நாள் - வலி-கிழக்கு**

தெல்லிப்பளைச் சந்தியில் இருந்து ஆரம்பமாகும் மரதன் சைக்கிள் ஓட்டம் மல்லாகம், சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், புத்தூர் ஊடாக நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியை வந்தடையும்.

**சிரமதானப் பணிகள்:**

மாவீரர் தினத்தை முன்னிட்டு பல சிரமதானப் பணிகள் யாழ் மாவட்டத்தின் பல இடங்களிலும் நடைபெறவிருக்கின்றன.

தென்மராட்சிப் பகுதியில் கைதடியில் இருந்து பளை வரையுள்ள பெருந்தெருவோரமுள்ள புற்கள், புதர்கள், பற்றைகள் ஆகியன துப்புரவு செய்தல்.

வடமராட்சியில் மருதங்கேணி வைத்தியசாலை, மந்திகை வைத்தியசாலை ஆகியவற்றில் துப்புரவு வேலைகள் செய்வதுடன் பெருந்தெருக்களையும் துப்புரவு செய்தல்.

தீவகத்தில் சரவணை - அராலித்துறைப்பாதையையும், வேலணை-அராலித்துறைப்பாதையையும், ஊரதீவு-இறுப்பிட்டி பாதையையும் செப்பனிடுதல். வலிகாமபிரிவில் பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலை வீதி, காரை நகர் - சங்கானை - மானிப்பாய் பிரதானவீதி, அளவெட்டி வைத்தியசாலை வீதி ஆகியனதுப்புரவு செய்தல்.

வலி - கிழக்கு பகுதியில் தெல்லிப்பழை - மருதனாமடம் பிரதானவீதி. இருபாலை - அச்சுவேலி பிரதானவீதி ஆகியன துப்புரவு செய்தல்.

யாழ்ப்பாணப் பகுதியில் தாவடி கிழக்கு கோண்டாவில் சந்தியில் இருந்து பலாலி வீதியூடாக ஆஸ்பத்திரிச்சந்தியூடாக கண்டி வீதி வழியாக அரியாலை வரை உள்ள வீதிகளை துப்புரவு செய்யும் பணிகளும் நடைபெறவிருக்கின்றன,

**போட்டிகள்:**

மாவீரர் தினத்தை முன்னிட்டு கூட்டுறவுக் கோட்டங்களில் தனித்தனியாக இடம் பெறும் பேச்சுப்போட்டி, குழுப்

—04-ம் பக்கம் பார்க்க

## மாவீரர் தின நிகழ்ச்சிகள்

## கிளிநொச்சி வீதிகளுக்கு மாவீரர்களின் பெயர்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் மாவீரர்தின விழாவுக்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகிறது

கிளிநொச்சி நகரில் உள்ள பல வீதிகளுக்கு வீரமரணமடைந்த மாவீரர்களின் பெயர்களைச் சூட்ட நகர் சிற்றூர் அவையினர் முடிவு செய்துள்ளனர்.

இதன்படி மாவீரர்கள் மாறன், கமல், வண்ணன், இதயறூபன் ஆகியோரின் பெயர்கள் வீதிகளுக்குச் சூட்டப்படவுள்ளன.

இதேவேளை நகர்வீதிகளை மாவீரர் தினத்தை முன்னிட்டு துப்புரவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (35)

### இன்று கலந்துரையாடல்

மாவீரர் தினம் சம்பந்தமான இறுதி நடவடிக்கைகள் பற்றிய கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாதிரிச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தெங்கு பனம்பொருள் உற்பத்தி, விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள் அனைவரும் சமுகம் அளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (66)

### சாவகச்சேரியில் பார்வையாளர் மண்டபம்

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வருகின்ற பார்வையாளர்கள் படுகின்ற சிரமத்தைப்போக்கும் வகையில் சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் ஐம்பதாயிரம் ரூபா செலவில் ஒரு பார்வையாளர் தங்கு மண்டபத்தை நிர்மாணித்து வருகின்றது.

இம்மண்டபம் மாவீரர் தினத்தன்று திறக்கப்படுமெனவும், அன்றைய தினம் வைத்தியசாலையில் கடமையாற்றும் அலுவலர்கள், ஊழியர்கள், நோயாளர்களுக்கு வர்த்தக சங்கத்தினால் மதிய போசனமும் வழங்கப்பட இருப்பதாகவும் வர்த்தக சங்கத் தலைவர் கு. தவராசசிங்கம் தெரிவித்தார். (ப 5)

### உரும்பராயிலும் சிரமதானம்

உரும்பராய் றோ. க. த.க. வித்தியாலயத்தில் மாவீரர் தினத்தை முன்னிட்டு வித்தியாலய அதிபர் திரு. கா. இராசகோபாலு தலைமையில் இரண்டு நாட்களாக சிரமதான வேலைகள் இடம் பெற்றன.

பாடசாலை மண்டபங்களையும், சுற்றுப்புறங்களையும் துப்புரவு செய்யும் பணியில் வித்தியாலய ஆசிரியர்களுடன் பழைய மாணவர்களும் சேர்ந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (23)

### நாளை சந்திக்க கோரிக்கை

தமிழீழ மாவீரர் தின விழா சம்பந்தமாகவும், தற்போதைய போக்குவரத்து விடயமாகவும் கலந்துரையாட வேண்டியுள்ளதால் சகல பஞ்சாயத்துச்சபைகள்,சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர், உபதலைவர், செயலாளர் ஆகியோரை சந்திரைச்சந்தை காரியாலயத்திற்கு நாளை செவ்வாய்க்கிழமை பகல் 10. 00 மணியளவில் சந்திக்குமாறு பிராந்திய மினிபஸ் சேவை சங்கத் தலைவர் பொன். மதிமுகராஜா தெரிவித்துள்ளார்.

### வீரமரணம்

மாவிட்டபுரம் மோதலில் காயமடைந்த கப்டன் செந்தில் கடந்த வியாழனன்று வீரமரணமடைந்தார். எதிர்பாராத விபத்தொன்றில் வல்லவன் (சுப்பிரமணியம் அருளானந்தன்) வீரமரணமடைந்தார்.

## அனலைதீவுக்குபுதியபடகுச்சேவை; வாரத்தில் 3 தினங்கள் நடைபெறும்

அனலைதீவில் இருந்து வெளியிடங்களுக்குச்செல்லும் பொதுமக்களின் வசதி கருதிச் சென்றமாதம் 31-ம் திகதி முதல் மோட்டார்ப் படகுச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

வாரத்தில் மூன்று நாட்களுக்கு மட்டுமே இச்சேவையினை நடாத்துவதற்கு ஸ்ரீலங்கா கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

திங்கள், புதன், சனிக்கிழமைகளில் காலை 8 மணிக்கு அனலைதீவில் இருந்து புறப்படும் இந்த மோட்டார்ப் படகு நயினாதீவில் இருக்கும் கடற்படை முகாமிற்குச் சென்று அங்கு கடற்படையினரின் பரிசோதனையினை முடித்துக் கொண்டு குறிகாட்டுவான் இறங்குதுறைக்குச் செல்ல வேண்டும்.

அதேதினத்தன்று பிற்பகல் 2 மணிக்கு குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து மேற்கண்டவாறு நயினாதீவு சென்று கடற்படையினரின் பரிசோதனையினை முடித்துக்கொண்டு அனலைதீவிற்குச் செல்லவேண்டுமெனப் பணிப்புரை வழங்கப்பட்டிருக்கின்றது. (19)

## உணவு முத்திரை பெறும் பொலிஸ் உத்தியோகத்தர்க்கு இலவச உணவுவிநியோகம் இல்லை

உணவு முத்திரைகள் பெற்று வரும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குடும்பத்துக்கு தற்பொழுது வழங்கப்பட்டுவரும் இலவச உணவுப் பொருட்கள் விநியோகம் 4-ம் கட்ட இலவச உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யும் பொழுது வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

1500க்கு மேல் வருமானம் பெறுபவர்கள், அரச ஊழியர்கள் போன்றவர்கள் பணம் கொடுத்துப் பெறுவது போல் நிவாரணப் பொருட்கள் வழங்கப்படும்.

இது சம்பந்தமான சுற்று நிருபம் சகல உதவி அரச அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (33)

தொடர் -- 10

## ‘முற்றுப் பெறாத யுத்தத்தின் முதல் 107 நாள்கள்’

இவற்றில் ஏறிய இராணுவத்தினர் கோட்டையை நோக்கி வந்தனர். கோட்டையைச் சூழ்ந்திருந்த புலிகளின் காவலரண்கள் அனைத்தும் விமானக் குண்டுவீச்சுக்களால் தரைமட்டமாக்கப்பட்டு விட்டன என்ற நம்பிக்கையுடன் விரைந்து வந்தனர்.

### ஆறுபடகுகள் பொடி

முதல் வந்த ஆறு விசைப்படகுகள் புலிகளின் தாக்குதலிற்குள்ளாகிச் சிதறின. பல படகுகளிலிருந்து இராணுவத்தினர் கடலிற்குள் குதித்துவிட்டனர் சில படகுகள் வந்த வேகத்தில் திரும்பிச் சென்றன. இச்சந்தர்ப்பத்தில் பண்ணைச் சந்தியிலிருந்த புலிகளின் பலமான காவலரண் விமானத்தாக்குதலால் உடைக்கப்பட்டதைப் பயன்படுத்தி மூன்று விசைப்படகுகள் வரையில் அப்பகுதியில் கரையேறின. ஏறிய வேகத்தில் அதிலிருந்து குதித்த ஸ்ரீலங்கா இராணுவ வீரர்கள் சிலர், பண்ணை வீதியை அடுத்து மேற்குப்புற அகழிக்கு வெளியில் அகழி மதிலோடு இருந்த தாழ் காவலரணில் (சின்னக்கோட்டையில்) புகுந்து கொண்டனர். புகுந்து தம்மை மறைத்துக் கொண்டு சென்றி நிலைஎடுத்துக் கொண்டனர். சின்னக்கோட்டைக்குள் புகுந்தவர்கள் மறைவெடுத்திருந்ததால் புலிகளால் தாக்க முடியாது போனது.

### இராணுவ சேதவிபரம்

யாழ் கோட்டையை அடைய எடுத்த முயற்சியில் 25 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக ஸ்ரீ லங்கா அரசு கூறியது. 106 பேர் கடுங்காயமடைந்ததாகவும் குறிப்பிட்டது. பின்னர் 40 இராணுவத்தினர் இறந்ததாகவும், அதில் நால்வர் உயர் அதிகாரிகள் எனவும் கூறியது.உண்மையில் இறந்த இராணுவத்தினர் நூற்றுக்கும் மேலானோர்.

சின்னக்கோட்டையில் தப்பிக்கரையேறிய சில இராணுவத்தினர் புகுந்துகொண்ட வேளையில்தான் பொம்மர் விமானம் புலிகளால் தாக்கப்பட்டுக் கடலில் விழுந்த நிகழ்வு நிகழ்ந்தேறியது. இராணுவத்தினரைக் கிலி கொள்ள வைத்த நிகழ்வு அது. அதனை விடுதலைப்புலிகள் அதிகார ஏடு பின்வருமாறு விபரிக்கிறது:

### விமானம் வீழ்த்தப்பட்டது!

''...இந்நிலையில் எதிரி விமானமொன்று ஆகாயத்தில் நாம் வைத்திருந்த ரவைக் குடையைப் பிய்த்தபடி கீழே வந்து சரி நேராக எமது நிலைகளைத் தாக்கத்துவங்கியது. இச்சண்டையில் ஈடுபட்டிருந்த புலி வீரன் ஒருவன் தெரிவித்தான்-சுமார் 11.15 மணி இருக்கும். காது செவிடுபடும் படியான குண்டுச்சத்தங்களின் மத்தியிலும் விமானங்களின் இரைச்சல்-மிக மிகத் தாளப்பறப்பதற்கான அறிகுறியுடன் கேட்டது.

''பிடரிப்பக்கம் வந்து மோதுவதைப் போன்று மிகவும் தாளப்பறந்து குண்டு வீசுவதும், பின்னர் காணாமல் போவதுமாக இருந்தது. இந்தச் சத்தத்திற்குச் செவி சாய்த்து அரணைவிட்டு வெளியே வந்து பார்க்க அவகாசம் இருக்கவில்லை.

''இரண்டு, மூன்று தடவைகள் அவ்விதமாகப் பதிந்து தாக்குவதும் பின்னர் மேலெழும்பும் சத்தமும் கேட்டது. இறுதியாக உறுமியபடி பின்புறத்திலிருந்து எமது நிலைகளை நோக்கி வந்த விமானம் வழமைக்கு மாறாக பண்ணைக்கடல் பக்கமாக வித்தியாசமான ஒலியை எழுப்பியபடி சென்றது பின்னர் எந்த விமானத்தின் ஒலியும் எமக்குக் கேட்கவில்லை.

''ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு' என்பதைப் போல, தொலைத்தொடர்பு நிலையத்துக்கு அப்பால் ஒரு முனையில் உருமறைப்புச் செய்தபடி விமான எதிர்ப்புத் துப்பாக்கியுடனிருந்த ஒரு தோழனுக்கு இரை கிடைத்து விட்டது.

''அவ்விமானம், தமிழீழ மண்ணில்தாளப் பறந்ததற்கான தண்டனையைப் பெற்று பண்ணைக் கடலுக்குள் குப்புற விழுந்து விட்டது. பண்ணை வீதிக்குக் கிழக்குப் பகுதியில், கோட்டைக்கு நேரே முன்னால் சுமார் 1000 யார் தொலைவில் வீழ்ந்த அதன் பாகங்கள் சிலவற்றை மறுநாள் எமது கடற்புலிகள் கரைசேர்த்தனர்.

விமானம் வீழ்த்தப்பட்டவுடன் சிங்களப் படைக்கு இருந்த இறுதி நம்பிக்கையும் அற்றுப்போக பண்ணைச் சந்திப் பக்கமாக நகர்ந்து வந்த இராணுவத்தினரில் எஞ்சியவர்கள் இறந்தவர்களின் உடல்களையும், ஆயுதங்களையும் விட்டுவிட்டு கோட்டையின் பின்புறத்தை நோக்கி பின் வாங்கினர்.

''இது இவ்வாறிருக்க பொலிஸ் நிலையப் பகுதி அரண்களைப் பார்ப்போம்.

### பொலிஸ் நிலையத்தருகே......

''அதிகாலை 6 00 மணிக்குத் தொடங்கி ஒரு சில நிமிடங்களில் கோட்டையை அடைந்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் புறப்பட்ட படகுகளில் மூழ்கடிக்கப்பட்டவை தவிர ஏனையவை கோட்டையை வந்தடைய சுமார் ஒரு மணி நேரத்திற்கும் அதிகம் சென்றது.

''பண்ணைச் சந்திக் காவலரணைக் கைப்பற்றச் சென்றதைப்போலவே மண்டைதீவிலிருந்துவந்த இராணுவத்தினரில் சிலர் பொலிஸ் நிலையக் கட்டிடங்களையும் கைப்பற்ற கோட்டையின் பின்புறமுள்ள கடற்கரை வீதியால் செல்ல முயன்றனர்.

''எமது மிதிவெடிகளில் சிக்கியும்பொலிஸ் நிலையக் காவல் அரண்களிலிருந்தும் விளையாட்டரங்குக் காவல் அரணுக்குள்ளிருந்தும் முழங்கிய எமது துப்பாக்கிகளுக்கும் ஒவ்வொருவராக விழத் தொடங்கினார்கள்.

''ஒரு மணிநேரமாக மண்டைதீவிலிருந்தும், கடலிலிருந்தும், கோட்டையிலிருந்தும், விமானத்திலிருந்தும் ஏவப்பட்ட குண்டுகளினால் எமது காவலரண்களில் சில உடைந்தே விட்டன. உடைந்து குவிந்த அந்தக் காவலரண்களையே காப்பரண்களாக்கிப் புலிகள் போரிட்டனர்.

மழைபோல் பொழிந்த எறிகணை வீச்சுகளினாலும், பீரங்கிக் குண்டுகளினாலும் இப்பகுதி அரண்களில் நின்ற பலர் காயமடைந்து விட்டனர். உடனடியாக அவர்களது இடத்தை நிரப்பி நின்று போரிடுவதற்காக மேலதிக போராளிகள் அனுப்பப்பட்டனர்.

‘அரவிந்தன்’

காயமடைந்த போராளிகள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டனர்.

''பொலிஸ் நிலையப்பக்கமிருந்து எதிரிக்கு கடுமையான எதிர்ப்பைக் கொடுத்து அவனது முன்னேற்றத்தை தடுத்தபடி இருந்த காவல் அரண் ஒன்று எதிரியின் பீரங்கித் தாக்குதலால் சரிந்து வீழ்ந்து விட்டது. கப்டன் ஆனந்தபாபுவின் தலைமையில் நின்று தீரமுடன் போராடிக் கொண்டிருந்த புலிகள் அதற்குள் சிக்கி விட்டனர்.

‘எதிரிக்குச் சவாலாக இருந்த எமது காவல் அரணொன்று அழிக்கப்பட்ட திருப்தியில் எதிரி மீண்டும் ஒரு முறை ஒரு புதிய நகர்வை எடுக்கத் தீர்மானித்தான்.

‘இதே சமயம் இந்தக்கோட்டை முகாம் முற்றுகைக்குப் பொறுப்பாக இருந்த புலி வீரன் சுரேஷ் குண்டுபட்டுக் காயமடைந்தான். (இந்திய இராணுவத்துடனான போரில் வவுனியாக் காட்டில் ஒரு குண்டு வெடிப்பில் சிக்கிய சுரேஷ் தனது ஒரு கையை இழந்தது குறிப்பிடத்தக்கது)

‘இவனுக்குப் பதிலாகப் புதிய புலிவீரன் ஒருவன்போர்முனைக்குஅனுப்பப்படுகின்றான்.

19 -ந் திகதி யுத்தத்தில் 13 விடுதலைப் புலிகள் களப்பலியாக நேர்ந்தது.

### உள்ளே புகுந்த இராணுவத்தினர்

கோட்டையின் மேற்குப்பக்க அகழியின் மதிலோடு அமைக்கப்பட்டிருந்த தாழ் காவலரணில் அதாவது சின்னகோட்டையில் புகுந்துகொண்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அன்றிரவு மேற்குப்புற அகழியைத் தாண்டி, இறங்கி நடந்து, கடந்து கோட்டை மதிலிலிருந்து கீழே இடப்பட்ட கயிற்றின் மூலம் ஏறி கோட்டைக்குள் நுழைந்து கொண்டனர். விடுதலைப் புலிகளின் பண்ணைக் காவலரண் தகர்ந்திருந்தமை அவர்களுக்கு வாய்ப்பாகி விட்டது. கோட்டைக்குள் நிகழ்ந்ததை அங்கிருந்து விடுதலையான பொலிஸ்காரர் பின்வருமாறு கூறுகிறார்:

''...முற்றுகை முறியடிப்பு எனக்கூறி சில இராணுவத்தினர் உள்ளே நுழைந்ததும் உள்ளே இருந்தவர்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தனர். இவர்கள் அரசின் வானொலி அறிவித்தபடி யாழ் நகரின் ஸ்ரான்லி வீதி வரை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது என நம்பினார்கள். கடல் வழியாக வந்த இராணுவத்தினர் குருநகர் மாடிவீட்டில் முகாம் அமைத்துள்ளனர் என்றும், இப்போது புலிகள் மீது இரு தரைப் பகுதிகளிலிருந்தும் தாக்குதல் நடைபெறுகிறது என்றும், விரைவில் கோட்டையை மீட்டு எடுத்து விடுவார்கள் என்றும் மண்டைதீவு முகாமிலிருந்து அறிவிக்கப்பட்டது.

(வளரும்)

# ரூபவாஹினியும், வானொலியும் கூறுவது

# உண்மையல்ல என்கிறார் சு. க. எம். பி.

இம்முறை உலக வங்கி இலங்கைக்குக் கடன் கொடுத்துள்ளது. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும், மக்களின் உரிமைகளைக் கொடுக்க வேண்டும்; மக்கள் பயமின்றி வாழ வழிவகுக்கப்படவேண்டும் என்ற உடன்படிக்கையின் படியே இக்கடன் வழங்கப்பட்டது. அதை மீறினால் இனிமேல் கடன் கிடையாது.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. ஏ. சி. குணரத்தினா நீர்கொழும்பில் நடைபெற்ற இக்கட்சியின் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்; அந்த உடன்படிக்கை செய்யப்பட்டு ஓரிரு நாட்களில் அரசு அதனை மீறிவிட்டது.

வீதியில் ஏழு சடலங்கள் எரிந்த நிலையில் காணப்பட்டன. இப்படி நடைபெற்றால் இனிக் கடன் கிடையாது.

நாட்டில் இடம்பெறும் எல்லா வைபவங்களுக்கும் ஜனாதிபதி செல்கிறார். ஏனைய அமைச்சர்களை அனுப்ப விரும்பவில்லை. உண்மை பேசவேண்டும்; சாத்வீக முறைப்படி நடக்க வேண்டும் என்று கூறுகிறார்.

ஆனால் ரூபவாஹினியிலும், வானொலியிலும் கூறப்படுவது எல்லாம் உண்மையில்லை. எனக்குத் தெரிந்த பலர் இராணுவத்தில் இருக்கின்றனர் என்றார்.

நிமல் சிறிபால எம். பி. தமது உரையில் அண்மையில் நான் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள பல இலங்கையர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு, காணாமற்போனோர் பட்டியலில் தாங்களும் இடம்பெறக் கூடும் என்ற அச்சத்தினாலேயே தாம் வெளிநாடு வந்ததாகக் கூறினார்கள் என்றார்.

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரி இன்று முதல் மானிப்பாயில்

தற்போது சங்கானை ஆஸ்பத்திரியில் இயங்கும் தெல்லிப்பழை ஆஸ்பத்திரி இன்று முதல் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் செயற்படும்.

ஆனால் இன்று முதல் வெளி நோயாளர் பிரிவு மட்டுமே இயங்கவுள்ளது.

நாளை செவ்வாய் முதல் சங்கானையில் உள்ள நோயாளிகள் இங்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். (74)

## வைத்திய சேவை

தெல்லிப்பழை துர்க்காபுரம் கூட்டுறவு வைத்தியசாலை நேற்று முதல் மீண்டும் தனது சேவையை வழமை போல் (24 மணி நேரமும்) ஆரம்பிக்கவுள்ளது.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளையடுத்து இவ் வைத்தியசாலை மூடப்பட்டிருந்தது தெரிந்ததே.(48)

## தனியார் கல்வி நிலைய கலந்துரையாடல்

மாவீரர் நாள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கு வடமராட்சி தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தையும் நாளை காலை 11.00மணிக்கு வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் கலந்துகொள்ளும் படி வடமராட்சி மாணவ இயக்கப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## வைத்தியசாலை இயங்குவதால் யாழ் நகர் வழமைக்கு வருகிறது

யாழ் நகரத்தின் பெரும்பாலான கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மீண்டும் படிப்படியாக இயங்கத் தொடங்கியுள்ளன.

சேதமடைந்துள்ள கடை உரிமையாளர்கள் தமது கடைகளைத் திருத்துவதில் ஈடுபட்டுள்ளதையும் அவதானிக்க முடிகிறது,

யாழ் போதனா வைத்தியசாலை முழுமையாக இயங்கத் தொடங்கியதை அடுத்து நகர வீதிகளில் அதிகளவான மக்கள் நடமாட்டத்தையும், வாகன நடமாட்டத்தையும் காணமுடிகிறது.

இதே வேளை திருத்தப்படும் கடைகளில் இருந்து இரவு வேளைகளில் ஓடுகள் திருடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது, (70)

## பாடசாலை அதிபர்களுக்கு பணிப்பாளர் வேண்டுகோள்

எதிர்வரும் டிசம்பர் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு பரீட்சைத் திணைக்களத்திற்கு இதுவரை விண்ணப்பிக்காத பாடசாலை அதிபர்கள் தாம் பூர்த்தி செய்த படிவங்கள் இருப்பின் நாளை 13-ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக யாழ் கல்வித்திணைக்களத்தில் சமர்ப்பிக்கும்படி கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

இதுவரை விண்ணப்பப்படிவங்கள் பெறாது விண்ணப்பிக்காத அதிபர்கள் படிவங்களை உடனடியாக யாழ் கல்வித் திணைக்களத்தில் பெற்று அவற்றைப் பூரணப்படுத்தி 13-ம் திகதியன்று உரிய கொடுப்பனவுகளுடன் நேரில் சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல சிரமங்கள் மத்தியில் இவ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் சகல அதிபர்களும் உன்னிப்பாக தொழிற்படுமாறும் பணிப்பாளர் தெரிவிக்கிறார்.

இப் பரீட்சை நடாத்துவது பற்றி நிலைமைகளை ஆராய்து பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நாகேந்திரம் கிருஸ்ணானந்தன்

படைப்பு: 10 - 01 - 1951

அழிப்பு: 12 - 11 - 1988

''உந்தன் வழி ஒன்று தான்
எங்கள் வழி என்று நாம்
நேர்மை ஒரு நாளும் தவறாமல் நடைபோடுவோம்''

குடும்பத்தினர்-ஆசிரியர்கள், மாணவர்கள்

பொருளியலாளர் அமரர் கிருஸ்ணானந்தன்

நினைவுப் பேருரையும் புத்தக வெளியீடும்

இடம்;- கைலாசபதி கலையரங்கு, யாழ்ப்பாண பல்கலைக் கழகம்
நேரம்;- இன்று பி. பகல் 2-30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

செயலர்
அமரர் கிருஸ்ணானந்தன் நினைவுப் பணிமன்றம்
யாழ்ப்பாணம்.

11063

### கொழும்பில்...

மா அதிபர்நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் திரு. சேது காவலர் தெரிவித்தார்.(ப11)

### 4-ம் மாடியிலிருந்து...

யமளித்த தேவராஜா என்பவர் குறிப்பிட்டார்.

தாமும் பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டு நான்காம் மாடியில் இருந்ததாகவும், சம்பவ தினம் பக்கத்து அறையில் அலுமாரி நகரும் சத்தம் கேட்டதையடுத்து அங்கு சென்று பார்த்த போது சரவணபவன் ஜன்னல் ஒன்றை உடைத்துக் கொண்டு இருந்ததாகவும் இவர் தெரிவத்தார்.

பாய்வதைத் தடுப்பதற்கு முன்பாகவே சரவணபவன் கீழே குதித்து விட்டார் என விசாரணையில் சாட்சிகள் தெரிவித்ததையடுத்து இவரது மரணம் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

1970 களில் சுதந்திரக்கட்சியின் ஆட்சியின் போது நடந்த புரட்சிச்சதி விசாரணையில் சந்தேக நபராக இருந்த தொடம்பே முதலாளியும் இவ்வாறே நாலாம் மாடியில் இருந்து குதித்து மரணமானது தெரிந்ததே.

### வைத்தியசாலை ..

தொடக்கம் 3 மணி வரையும் கிளினிக்குகள் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (71)

### காரைநகர் ..

சாலைக்கு 75 வீத மாணவர்களும், சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலைக்கு 70 வீத மாணவர்களும், ஏனைய பாடசாலைகளில் சராசரி 80 வீத மாணவர்களும் வருகை தந்தனர்.

காரைநகரில் கடற்படைத்தளமும் கடற்பிரதேசத்தில் போர்க் கப்பல்களின் நடமாட்டமும் வானத்தில் தெரியும் போர் விமானங்களும் முகாமுக்கு அடிக்கடி வந்து போகும் ஹெலிக்கொப்டர்களின் அச்சுறுத்தல்களின் மத்தியிலும் இம் மாணவர்களின் வரவு கல்வி வளர்ச்சியில் திருப்தியளிப்பதாக உள்ளதாகவும் இதற்கு மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோர்களும் ஓர் உந்து சக்தியாக விளங்குகின்றார்களெனவும் காரைநகர் பிரதேச கொத்தணி அதிபர் திரு. எம். திருநீலகண்டசிவம் தெரிவித்தார். (ப-31)

### கூட்டுறவாளர்...

பாடல் போட்டி, நாடகப் போட்டி, வினாடி வினா ஆகியவற்றின் தேர்வுப் போட்டிகள் இம் மாதம் 17 ந் திகதி காலை 9 மணிக்கு கோட்டமட்டத்தில் நடைபெறும்.

இப்போட்டிகளில் தெரிவு செய்யப்படுபவர்களிடையே யாழ் மாவட்ட ரீதியான இறுதிப்போட்டி 19 ஆம் திகதி சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் இடம் பெறும்.

கோட்டப்போட்டி நடைபெறும் இடங்கள்:

| | |
|---|---|
| தென்மராட்சி: | கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம். |
| வடமராட்சி: | பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி. |
| தீவகம்: | புங்குடுதீவு மகாவித்தியாலயம். |
| வலிகாமம்: | சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி. |
| வலிகிழக்கு: | அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி. |
| யாழ்ப்பாணம்: | திருநெல்வேலி விவசாய போதனாசிரியர் பாடசாலை. |

(66)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 12-11-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.